## நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 18-வது பட்டமளிப்பு விழா 16.12.2023 அன்று டிரினிடி கலையரங்கில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரித் தலைவர் கே. நல்லுசாமி தலைமை தாங்கினார். டிரினிடி அகாடமியின் இயக்குநர்கள் ஆர். குழந்தைவேல், பி. பழனிசாமி, டி. சந்திரசேகரன், பி. தயாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் வரவேற்புரையாற்றி கல்லூரியின் சிறப்பியல்புகளை எடுத்துரைத்தார்.

சிறப்பு அழைப்பாளராக சென்னை – டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ். கீதாலட்சுமி கலந்து கொண்டு ஏறத்தாழ 550 மாணவியருக்கு பட்டம் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

உயர்கல்வி என்பது மகளிர்க்கு மிகவும் இன்றியமையாததாகும். பட்டம் பெறும் இந்நாள் உங்கள் வாழ்வில் ஒரு முக்கியமான நாளாகும். பட்டம் படித்த அனைவரும் இந்த சமுதாயத்திற்கு சேவை ஆற்ற முன் வர வேண்டும். குறிப்பாக தொழில்முனைவோராக நீங்கள் உருவாக வேண்டும். மத்திய, மாநில அரசுகள் மகளிர்க்கு பல சலுகைகளை வழங்குகின்றன. அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உழைப்பு நம்மை எப்போதும் கைவிடாது. பிறருக்கு உதவி செய்தல் என்பது இந்த சமுதாயத்திற்கு உதவி செய்தல் போன்றதாகும் என்று இந்நிகழ்வில் அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வி - இயக்குநர் அரசுபரமேசுவரன், நிர்வாக அலுவலர் என். எஸ். செந்தில்குமார் உட்பட துறைத்தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள் கலந்துகொண்டனர்.